


**23.03.2025**

**தலைப்புச்செய்திகள்**

1. **வளர்ச்சியடைந்த இந்தியா இலக்கை எட்ட** சுதந்திர போராட்ட வீரர்களின் தியாகம் உத்வேகம் அளிப்பதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. **தூய்மை எரிசக்தி உற்பத்தியில் உலக நாடுகளின்** ஒருங்கிணைப்பின் அவசியத்தை வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

3. **தமிழகத்தில் ஒரு லட்சம்** மகளிர் தொழில் முனைவோரை உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக மாநில அமைச்சர் திரு. தங்கம்தென்னரசு கூறியுள்ளார்.

4. **நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல்,** ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

5. **IPL 20-20 கிரிக்கெட் போட்டியில்** சென்னை சூப்பர் கிங்ஸ், மும்பை இண்டின்ஸை இன்று எதிர்கொள்கிறது.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖❖❖

**தியாகிகள் தினம்**

**வளர்ச்சியடைந்த இந்தியா இலக்கை எட்ட** சுதந்திர போராட்ட வீரர்களின் தியாகம் உத்வேகம் அளிப்பதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

தியாகிகள் தினத்தை ஒட்டி இன்று அவர் வெளியிட்டுள்ள செய்தியில் விடுதலை போராட்ட வீரர்கள் பகத்சிங், ராஜ்குரு, சுகதேவ் ஆகியோரின் சுதந்திரம் மற்றும் நீதிக்கான தியாகம் அனைவருக்கும் தொடர்ந்து ஊக்கமளிப்பதாக கூறியுள்ளார்.

இந்நாளையொட்டி நாடுமுழுவதிலுமுள்ள நினைவுச் சின்னங்களில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விழுப்புரத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சுதந்திர போராட்ட தியாகிகளின் திருவுருவப்படங்களுக்கு நேரு யுவகேந்திரா அமைப்பு சார்பில் மலர்த்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து பல்வேறு இடங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டன.

சுதந்திர போராட்டத்தின் போது 1931-ம் ஆண்டில் தங்கள் இன்னுயிரை தியாகம் செய்த புரட்சியாளர்கள் பகத்சிங், ராஜ்குரு, சுகதேவ் ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஆண்டுதோறும் மார்ச் 23-ம் தேதி தியாகிகள் தினம் அனுசரிக்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖❖

**ஜெய்சங்கர்**

**தூய்மை எரிசக்தி உற்பத்தியில் உலக நாடுகளின்** ஒருங்கிணைப்பின் அவசியத்தை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்

மும்பையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசியஅவர், சர்வதேச அளவில் தொழில்துறை கொள்கைகள், ஏற்றுமதி கட்டுப்பாடுகளில் உள்ள சவால்களை எதிர்கொள்ள இந்தியா பல்வேறு யுக்திகளை மேற்கொண்டு வருவதாக கூறினார்.

பாதுகாப்பு மற்றும் வணிகத்தில் ஒத்துழைக்கும் நாடுகளை இந்தியா கவனத்துடன் தேர்வு செய்துள்ளதாக குறிப்பிட்டார்.

இந்தியா ஒரே நேரத்தில், ரஷ்யா - உக்ரைன், இஸ்ரேல் - ஈரான், பிரிக்ஸ் - குவாட் நாடுகளுடன் வர்த்தக உறவுகளில் ஈடுபடுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

**மன்சுக் மாண்டவியா**

**நாட்டுமக்கள் அனைவரும் உடற்பயிற்சி மற்றும் சைக்கிள்** ஓட்டுதலை அன்றாட பழக்கமாக்கி கொள்வதன் மூலம் திறன்மிகு இந்தியா இயக்கத்தை வெற்றிபெற செய்ய முடியும் என்று மத்திய விளையாட்டு துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமைகளில் சைக்கிள் ஓட்டுதல் பிரச்சாரத்தை லக்னோவில் இன்று தொடங்கிவைத்து உரையாற்றிய அவர், மன மற்றும் உடல் ஆரோக்கியத்தை பேண இப்பயிற்சி பெரிதும் உதவும் என்றார்.

இந்நிகழ்ச்சியில் 400-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

நாடுமுழுவதும் இதுவரை 4 ஆயிரத்து 200 இடங்களில் இத்தகைய இயக்கம் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖❖

**திரைப்பட விழா**

**அமெரிக்காவின் சியாட்டில் நகரில் முதல் இந்திய** திரைப்பட விழா இன்று தொடங்கியது.

கலாச்சார அருங்காட்சியகத்தில் நடைபெறும் இந்த 3 நாள் நிகழ்வில் இந்தியாவின் கருத்துக்கள் மற்றும் தொலைநோக்கு பார்வை குறித்து விளக்கம் அளிக்கும் வகையில், பிரதமர் திரு. நரேந்திரமோடியுடன் அமெரிக்காவின் செயற்கை நுண்ணறிவு விஞ்ஞானியும், ஊடகவியளாலருமான Lex Fridman பங்கேற்ற நேர்முக நிகழ்ச்சியின் சில பகுதிகள் ஒளிபரப்பப்பட்டன.

❖❖❖❖❖❖❖❖❖

**CUTE**

**மத்திய அரசு பல்கலைக்கழகங்கள் மற்றும்** தனியார் பல்கலைக்கழகங்களில் கலை அறிவியல் படிப்புகளில் சேர்வதற்கான க்யூட் இளநிலை நுழைவு தேர்விற்கு விண்ணப்பிக்க நாளை வரை காலஅவகாசம் நீட்டிக்கப்படுவதாக தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

இத்தேர்வுகள் வரும் மே 8-ம் தேதிமுதல் ஜுன் ஒன்றாம் தேதிவரை நாடுமுழுவதும் 15 நகரங்களில் நடைபெறவுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

**தமிழக சட்டப்பேரவை**

**தமிழக சட்டப்பேரவையில் நாளைமுதல்** அடுத்தமாதம் 30-ம் தேதிவரை 2025-26-ம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்ற மானிய கோரிக்கைகள் மீதான விவாதம் நடைபெறும்.

நீர்வளம் மற்றும் இயற்கை வளங்கள் துறை மீதான விவாதங்கள் நாளை இடம்பெறும்.

❖❖❖❖❖❖❖❖

**தங்கம்தென்னரசு**

**தமிழகத்தில் அடுத்த ஆண்டிற்குள் ஒருலட்சம் மகளிர் தொழில்** முனைவோரை உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக மாநில நிதியமைச்சர் திரு. தங்கம்தென்னரசு தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் மல்லாங்கிணறில் இன்று தாலிக்கு தங்கம் மற்றும் திருமண நிதியுதவி வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்று பேசியஅவர், நாட்டிலேயே தமிழகத்தில் 42 சதவிகித மகளிர், தொழிற்சாலைகளில் பணிபுரியும் திறன் பெற்றிருப்பதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியில் காரியப்பட்டி, திரிச்சூழி, நரிக்குடி, விருதுநகர், சிவகாசி உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த 104 பயனாளிகளுக்கு ஒருகோடியே ஐந்தரை லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖

**சேகர்பாபு**

**நாளைய வளமான சமூகத்திற்கு** இன்றைய கல்விமுறை அடித்தளமாக அமையும் என்று மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சென்னை அம்பத்தூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த கல்வித்துறைக்கு மும்மொழி கல்வி உள்ளிட்ட வற்புறுத்தல்களை தவிர்த்து உரிய நிதியை வழங்க வேண்டுமென்று மத்திய நிதியமைச்சரை கேட்டுக்கொண்டார்.

❖❖❖❖❖❖❖❖

**மா.சுப்ரமணியன்**

**கோவை பொகலூர் அரசு ஆரம்ப சுகாதார** நிலையத்தில் நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள், மருந்து கையிருப்பு, மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்டவைகளை

மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்ரமணியன் இன்று ஆய்வுசெய்தார்.

மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களின் குறைகளை கேட்டறிந்த அமைச்சர் அவற்றிற்கு உடனடி தீர்வுகாண அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

❖❖❖❖❖❖❖❖

**அன்புமணி ராமதாஸ்**

**தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்பட** வேண்டியதன் அவசியத்தை பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் திரு.அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்

இதுகுறித்து இன்று அவர் வெளியிட்டுள்ள செய்தியில் திட்டமிட்டு நடத்தப்படும் குற்றச்சம்பவங்களை காவல்துறை தடுக்கமுடியாமல் இருப்பது கவலை அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

**போதை பொருள்**

**போதை பொருள் ஒழிப்பு குறித்த பல்வேறு** விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாநிலம் முழுவதும் இன்று நடைபெற்றது.

**தூத்துக்குடி மாவட்டம் காமநாயக்கன் பட்டியில்** நடைபெற்ற விழிப்புணர்வு சைக்கிள் பேரணியில் 300-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

**.. வாய்ஸ் ..**

ஈரோட்டில் 4 கிலோ மீட்டர் தூரம் நடைபெற்ற வாக்கத்தானில் விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியவாறு 500-க்கும் மேற்பட்ட பள்ளி மாணாக்கர் கலந்து கொண்டனர்.

சேலத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டத்தில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளையோர் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖❖

**ராணிப்பேட்டை வாய்ஸ்**

**ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காட்டில் இயற்கை** வேளாண் முறையில் விளைவிக்கப்படும் நெற்பயிர் குறித்து விளக்கும் வகையில் நெல் அரிசி திருவிழா நடைபெற்று வருகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖❖❖

**பறவைகள் கணக்கெடுப்பு**

**சிவகங்கை மாவட்டம் வேட்டங்குடிபட்டி சரணாலயத்தில்** பறவைகள் கணக்கெடுக்கும் பணி நடைபெற்றது.

இதில் தேன்பருந்து, சிவப்புதலை தூரிகை, பொறிப்பு புள்ளி ஆந்தை உள்ளிட்ட புதிய பறவையினங்கள் கண்டறியப்பட்டுள்ளதாக வனத்துறை தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

**இருவரி**

**பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்த முன்னாள் படைவீரர்கள்** மற்றும் அவர்களது குடும்பத்தினர் முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டத்தின் கீழ் கடனுதவி பெற exwel.schemes.com என்ற இணையதளத்தில் விண்ணப்பித்து பயன்பெறலாம் என ஆட்சித்தலைவர் திருமதி. கிரேஸ் பச்சாவ் தெரிவித்துளார்.

**மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி** திருக்கடையூர், தில்லையாடி, சிங்கானோடை உள்ளிட்ட பகுதிகளில் கோடை வெயிலுக்கு உகந்த வெள்ளரிக்காய் தர்பூசணி பழங்கள் இயற்கை உரங்களை கொண்டு சாகுபடி செய்யப்படுவதாக இப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

**மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் பெய்துவரும்** கனமழை காரணமாக நெல்லைமாவட்டம் அகஸ்தியர் அருவி, மணிமுத்தாறு அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதை அடுத்து 2-வது நாளாக இன்றும் சுற்றுலா பயணிகள் குளிக்க தடைவிதிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

**ஜாக்டோ ஜியோ**

பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்துதல், அரசு துறைகளில் காலியாக உள்ள பணியிடங்களை உடனடியாக நிரப்பவேண்டும் உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஜாக்டோ ஜியோ அமைப்பு சார்பில் ஒருநாள் அடையாள உண்ணாவிரத போராட்டம் மாநிலம் முழுவதும் இன்று நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖

**உதகை வாய்ஸ்**

**உதகை - குன்னூர் இடையேயான கோடைகால** சிறப்பு ரயில் வரும் 28-ம் தேதி தொடங்கி வாரந்தோறும் வெள்ளிக்கிழமை முதல் திங்கட்கிழமை வரை இயக்கப்படவுள்ளதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

**கன்னியாகுமரி வாய்ஸ்**

**கன்னியாகுமரி மாவட்ட சுற்றுலா தளங்களில்** வார விடுமுறையை ஒட்டி சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

**வானிலை**

**வளிமண்டல கீழடுக்கு சுழற்சி மற்றும் காற்றின்** வேகமாறுபாடு காரணமாக நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி ஆகிய 8 மாவட்டங்களில் இன்று கனமழைபெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**IPL 20-20 கிரிக்கெட் போட்டியில் சென்னையில்** இன்றிரவு ஏழரை மணிக்கு சென்னை சூப்பர் கிங்ஸ் - மும்பை இண்டின்ஸுடன் மோதுகிறது.

ஹைதராபாத்தில் பிற்பகல் மூன்றரை மணிக்கு சன்ரைசர்ஸ் ஹைதராபாத் - ராஜஸ்தான் ராயல்ஸை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**